திருவள்ளுவர் ஆண்டு 2056 14.05.2025

# உலகத்தமிழ்

இதழ் உஅச (284)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்




களவின்கண் கன்றிய காதல் எனக் கள்ளாமை அதிகாரம் வாயிலாகச் சுட்டிக்காட்டித்
தொடங்கும் குறள் எண் இருநூற்(று) எண்பத்து நான்கு

அளவின்கண் வல்லுநர்களின் அருங்கட்டுரைகளைத் தேடித் தொகுத்து, அறிவன் தோறும்
வெளியிடும் உலகத் தமிழிதழ் அணிவரிசை இருநூற்(று) எண்பத்து நான்கு

# உள்ளடக்கம்

1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி (தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடுகள்) 5

3. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 6

4. தமிழெழுச்சி 7

5.செவிலியர் – இரண்டாம் தாய்! 8

6. அவ்வப்போது! 9

7. தேன்துளி! 11

8. சேரமன்னர் வரலாறு! 12

9. குறளமுதம் 13

10. ஆழங்கண்ட ஆளுமையர்! 14

11. நற்றிணை – ஆங்கிலம் 15

12. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 16

உள்ளடக்கம்


13. கல்வி என்பது பெருங்கடல் 17

14. Brief Life Sketches Of The European Scholars 18

15. வள்ளுவம்! 19

16. தமிழன்னை நான்மணிமாலை! 20

17. அகலாது அணுகாது பழகுக 21

18. மலாயா ஆவணங்கள்! 22

19. பூ மழை 24

20. அறிவோம்! 28

21. பொருள்களின் இணையப் பயன்பாடுகள் 29

22. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! 31

23. செய்தி வெளியீடு 32

24. சட்டவியல் அகரமுதலி! 35

25. புகழ் வணக்கம்! 36

# கொள்கை விளக்கக் குறிப்பு...

தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்
(2024 - 2025)

## இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)

### 1.2.10 தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம் (சிறந்த நூல்கள் / அரிய நூல்கள்/ மொழிபெயர்ப்பு நூல்கள்)

*சிறந்த நூல்களை வெளியிடுவதற்கான நிதியுதவி திட்டம் 1994-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது. சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும் அரிய நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும் அதே போன்று பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் என நூலின் சிறப்புத் தன்மையைப் பொறுத்து ஆகும் செலவினம் எழுதுபொருள் அச்சுத்துறையால் மதிப்பீடு செய்து நூல் அச்சிட்டு வெளியிட அரசால் உச்ச அளவாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதியுதவி வழங்கப்படுகிறது.*

**2024-2025-ஆம் ஆண்டில் ரூ.7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### j) Financial assistance for the publication of books for the development of Tamil (Best Books / Rare Books / Translation Books)

*The scheme of financial assistance for the Publication of Best books has been implemented since 1994. Financial assistance with a ceiling of Rs.50,000/- (Rupees Fifty thousand only) is accorded for the publication of best books / reprinting of rare books / translation and publication of books from other languages with the estimation of Stationary and Printing Department.*

**An amount of Rs.7,50,000/- (Rupees seven lakh fifty thousand only) has been allocated for the FY 2024-2025.**

# நூலேணி

## தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகள்




| | |
|---|---|
| நூலின் பெயர் | ஆட்சிச் சொல்லகராதி திருத்திய பதிப்பு (தொகுதி-1) |
| நூலாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2022 |
| விலை | விலையில்லா நூல் |
| பக்கங்கள் | 515+14 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | ஆட்சிச் சொல்லகராதி திருத்திய பதிப்பு (தொகுதி-2) |
| நூலாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2022 |
| விலை | விலையில்லா நூல் |
| பக்கங்கள் | 452 + 14 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | ஆட்சிச் சொல்லகராதி திருத்திய பதிப்பு (தொகுதி-3) |
| உரையாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2022 |
| விலை | விலையில்லா நூல் |
| பக்கங்கள் | 538+14 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | புறநானூறு |
| உரையாசிரியர் | தமிழ் வளர்ச்சித் துறை |
| பதிப்பாண்டு | 2024 |
| விலை | 600 |
| பக்கங்கள் | 880 |


# நூலேணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

118




| | |
|---|---|
| நூலின் பெயர் | வளர்ச்சிப் பாதையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| நூலாசிரியர் | அன்னிதாமசு, மு. வளர்மதி |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.200/- |
| பக்கங்கள் | 448 |
| வெளியீட்டு எண் | 500 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | நாமக்கல் கவிஞரின் உரைநடைப் படைப்புகளில் காந்தியமும் தேசியமும் |
| பதிப்பாசிரியர்கள் | கி.ர. அனுமந்தன் |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.35/- |
| பக்கங்கள் | 125 |
| வெளியீட்டு எண் | 507 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் |
| பதிப்பாசிரியர் | சா. கிருட்டினமூர்த்தி, சு. சிவகாமி |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.35/- |
| பக்கங்கள் | 112 |
| வெளியீட்டு எண் | 508 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | திருமணம் செல்வக்கேசவராய முதலியார் |
| நூலாசிரியர் | சா.கிருட்டின மூர்த்தி, சு. சிவகாமி |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.30/- |
| பக்கங்கள் | 103 |
| வெளியீட்டு எண் | 509 |

# தமிழெழுச்சி...



பல்லில் கனியிதழில் பாய்ந்த நிலவினையான்
என்றும் மறத்தல் இயலுமோ? பாரின்மிசை
நின்றதொரு மின்கொடிபோல் நேர்ந்தமணிப் பெண்ணரசின்
மேனி நலத்தினையும் வெட்டினையும் கட்டினையும்
தேனி லினியாள் திருத்த நிலையினையும்

– பாரதியார்



வேல்விழியால் என்றன் விலாப்புறத்தைக் கொந்தாதே
பால்போல் மொழியால் பதைக்கஉயிர் வாங்காதே
கண்ணாடிக் கன்னத்தைக் காட்டிஎன் உள்ளத்தைப்
புண்ணாக்கிப் போடாதே; போபோ மறைந்துவிடு!

– பாரதிதாசன்



# செவிலியர் – இரண்டாம் தாய்!



'கை விளக்கேந்திய காரிகை' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பெறும் 'பிளாரன்ஸ் நைட்டிங்கேல்' பிறந்தநாளான மே 12 ஒவ்வொரு ஆண்டும் 'உலக செவிலியர் நாள்' என்று கொண்டாடப்படுகின்றது.

ஒரு புள்ளியியல் நிபுணர்; சமூக சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; நவீன தாதியல் முறையைக் கட்டமைத்தவர்; போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்ட மகத்துவம் மிக்கவர் என்று பலவாறு அறியப்படும் நைட்டிங்கேலின் பிறந்தநாள் செவிலியர் நாளாக 1974ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

'செவிலியர்களைப் பராமரிப்பது பொருளாதாரங்களை வலுப்படுத்துகிறது' என்பதே நடப்பாண்டின் உலக செவிலியர் நாளின் கருப்பொருளாகும்.

பிறக்கும் குழந்தைக்கு இரண்டாம் தாயாக மாறுபவர்கள் செவிலியர். தமிழர்களின் பெருமைக்குரிய சங்க இலக்கியத்தில் தலைவியின் வளர்ப்புத் தாயாக அறியப்படுபவள் செவிலித்தாய். களவு, கற்பு என்ற இரு ஒழுக்கத்திலும் செவிலி கூற்றினைக் காணலாம். அந்தச் சங்கத்தமிழில் தலைவியின் வளர்ப்புத் தாயான செவிலி நவீன உலகில் அனைவருக்கும் இரண்டாம் தாயாக, செவிலியராகி உள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

பெருந்தொற்று காலங்களில் தங்களது இன்னுயிரை ஈந்தும் மக்கள் பணியாற்றியவர்கள் செவிலியர். அவர்களின் தொண்டு அளப்பரியது; தூய்மையானது. ஆரோக்கியமான மக்களைக் கொண்டுள்ள நாடு பொருளாதாரத்தை நோக்கி உந்தப்படுகின்றது. அதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் செவிலியர்.

தன் எதிரில் உள்ள நோயாளியின் பாலினம், சாதி, சமயம், நிறம், மொழி என எவ்வித பாகுபாட்டையும் பற்றிச் சிந்திக்காமல் மனிதன் என்ற ஒற்றைப் புள்ளியில் நின்று, அவர்களைப் பராமரிக்கும் செவிலியரின் பணியினைப் போற்றுவோம்! அவர்களை மதித்துக் கொண்டாடுவோம்!

*****

முனைவர் ஔவை அருள்
இயக்குநர்

தமிழ் வளர்ச்சித் துறை.
தமிழ் வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.


நாள்: 07.05.2025

## பல்லாண்டு; பல்லாயிரத்தாண்டு!

தில்லியில் பெருந்தமிழராக விளங்கிய ராவ் பகதூர் சி. குப்புசாமி முதலியார் அவர்களின் தலைமையில் தில்லி டால்கடோரா கிளப் கட்டடத்தில் நடந்த கூட்டத்தில் அப்போது கவர்னர் ஜெனரலாக விளங்கிய சக்கரவர்த்தி சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் இந்துஸ்தான் டைம்ஸ் நாளேட்டின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய திரு. க. சந்தானம் அவர்களும் நெஞ்சார வாழ்த்தி 13.04.1946 அன்று தில்லி தமிழ்ச் சங்கம் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பெற்று தங்குதடையின்றி கடந்த 80 ஆண்டுகளாக தமிழர்களின் அடையாளமாகவும் அணிகலனாகவும் சிறந்து திகழ்கிறது.

> தமிழன் என்றோர் இனமுண்டு
> தனியே அவர்க்கோர் குணமுண்டு

என்ற வரிகளுக்கேற்ப அறுபதுகளில் எந்தையார் தில்லி வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றும் பொழுது தனக்கு புகலிடமாக தில்லித் தமிழ்ச் சங்கம் திகழ்ந்தது என்று அவர் சொல்லாத நாளில்லை. அதே தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 2010ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரிடமிருந்து "தாமரைத்திரு" விருது பெற்ற அன்று மாலை தில்லித் தமிழ்ச் சங்கத்தில் பாராட்டு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொழுது பெருமகிழ்ச்சியுடன் சங்கத்தைக் குறித்தும் தில்லி வாழ் தமிழர்களின் பரிவினைக் குறித்தும் வானளாவப் புகழ்ந்தது இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதே நாமக்கல் வரிகளை சிறிது மாற்றி இப்படிக் கூறலாம்.

> அமிழ்தம் தமிழருடைய மொழியாகும்
> அன்பே தமிழர்களின் வழியாகும்.

தமிழ்நாட்டின் எந்த மூலையிலிருந்தும் தில்லிக்கு வருபவர்களுக்கு தில்லித் தமிழ்ச் சங்கம்தான் தமிழர் கோட்டமாகவும் மாபெரும் விருந்தினர் வளாகமாகவும் பரிமளிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 23.4.1972 அன்று தில்லித் தமிழ்ச் சங்கத்தின் கட்டடத்தை திறந்து வைத்தார்கள். மேலும், 21.02.1997அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திருவள்ளுவர் கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது. 29.11.2006 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் சங்க இணையதளத்தைத் தொடங்கி வைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 4.12.2008 அன்று சங்க வளாகத்தில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை திறப்பு விழா, தோரணவாயில் கால்கோள் விழா மற்றும் செம்மொழி விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டார்.

முத்தமிழறிஞரின் அடியொற்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.02.2025 அன்று தில்லி வாழ் தமிழர்களின் வழித்தோன்றல்கள் பயனுறும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, நடனம் மற்றும் இசை வகுப்புகள் நடத்துதல். தமிழ் சார்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழிணையக் கருத்தரங்குகள் உள்ளிட்ட தமிழ் சார்ந்த நிகழ்வுகள் நடத்திட ஏதுவாக தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கத்தினைப் புனரமைத்திட ரூபாய் 50 இலட்சம் வழங்கினார்.

அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கத்தின் நல்லற வழியில் தன்னைத் தகவமைத்துக் கொண்டு செயலாற்றிவரும் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அண்ணல் சக்திபெருமாள் அவர்கள் தகத்தகாயமாக தன் இரு தோள்களாக திரு. இராகவன் மற்றும் திரு. முகுந்தன் ஆகியோர் உள்ளிட்ட அனைத்து நல்லுள்ளங்களுடன் இணைந்து ஒப்பறிய தமிழ்ப் பணிகளை ஆற்றி வருவதை நேரில் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன். வாழ்நாள் முழுவதும் தமிழைத் தங்கள் நெஞ்சங்களில் தேக்கிக் கொண்டு எங்கிருந்தாலும் தமிழர்களின் நலத்திற்காக அரும்பாடுபட்டுவரும் உறுப்பினர் பெருமக்களையும் வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன்.

முத்தமிழ் முழங்கும் இடமாய்; ஆடல்கள் அரங்கேறும் அரங்கமாய்; இசை இன்புறும் இடமாய்; தமிழ்ப் பயிலகமாய்; பன்பாட்டின் பாசறையாய்; ஈகையின் உறைவிடமாய் தில்லித் தமிழ்ச் சங்கம் முத்து விழாவைக் கடந்து, நூற்றாண்டுகள் கடந்து வெற்றிநடை போடவேண்டும் தமிழ் எத்திக்கிலும் பரவ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

(ந. அருள்)

7/5/25

அலைபேசி: 98410 26043, மின்னஞ்சல்: dr.n.arul@gmail.com




## தேன்துளி - 1

**காட்சிக் கருவூலம்**

**மதுரையில் கமலா தியேட்டர் உரிமையாளர் சிதம்பரம் இல்லத்தில் மேனாள் துணைவேந்தர் ஔவை நடராசன் அவர்களுடன் பயணித்து உரையாடிய தருணம்.**
**அப்போது நான் பத்திரிகையாளன்.**
**எத்தனை எத்தனை பயணங்கள் அந்தத் தமிழ் மேதையுடன்.**
**கற்கண்டுச் சொற்களால் களமாடிய தமிழ் பேராசான்.**



## தேன்துளி - 2

*தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழறிஞர்கள் 217 பேருக்கு ரூ.5,000/-மும் (ரூ.4,500 + ரூ.500 ம.படி)*

*தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 570 பேருக்கு ரூ.3,000/-மும் (ரூ.2,500 + ரூ.500 ம.படி)*

*அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 621 பேர் ரூ.4,000/-மும் (ரூ.3,500 + ரூ.500 ம.படி)*

*அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 80 பேருக்கு ரூ.3,000/-மும் (ரூ.2,500 + ரூ.500 ம.படி)*

*எல்லைக் காவலர்கள் 60 பேருக்கு ரூ.6,000/-மும் (ரூ.5,500 + ரூ.500 ம.படி)*

*எல்லைக் காவலரின் மரபுரிமையர்கள் 130 பேருக்கு ரூ.3,500/-மும் (ரூ.3,000 + ரூ.500 ம.படி)* திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது...



# சேரமன்னர் வரலாறு!

222

- உரைவேந்தர் ஔவை துரைசாமி

## முடிப்புரை

சேரமான் அந்தை: இவர் பெயர் எந்தை என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. அந்தை என்பது இவரது இயற்பெயர். பண்டை நாளில் அந்தை ஆந்தை என்பன மக்கட் பெயர் வகையாக இருந்துள்ளன. கோட்டையூர் நல்லந்தையார் என்றொரு சான்றோர் சங்க நூல்களில் காணப்படுகின்றார். இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயினும் இவர் பாடிய பாட்டுகள் தொகை நூல்களில் உள்ளன.

புதுமணம் செய்து கொண்டு மனை வாழ்வில் இன்புற்றிருக்கும் செல்வக் காதலரிடையே கடமை காரணமாகக் காதலன் பிரிந்து செல்ல வேண்டியவனாகிறான். அவனது குறிப்பறிந்த காதலிக்கு அவன் பிரிவு வருத்தம் செய்கிறது. "நீர்வார் கண்ணாய், நீ இவண் ஒழிய யாரே பிரிகிற்பவரே?" என்று தோழி தேற்றுகிறான். பின்பு ஒருவாறு அவளைத் தேற்றிவிட்டு அவன் சென்று விடுகிறான். சென்ற விடத்தே அக் கட்டிளங்காதலன் கண்ணெதிரே, கானம் தளிர்த்துப் பூத்து இனிய காட்சியால் அவன் உள்ளத்தை ஈர்க்கின்றது. தான் பெறும் இன்பத்தைத் தன் காதலியோடு உடனிருந்து நுகர்தற் கில்லாமையை நினைந்து அவன் வருந்துகிறான். அதனை எண்ணிய இச் சேரமானார்,

**"காடணி கொண்ட காண்தகு பொழுதின்**
**நாம்பிரி புலம்பின் நலம்செலச் சாஅய்**
**நம்பிரிவு அறியா நலனொடு சிறந்த**
**நற்றோள் நெகிழ வருந்தினன் கொல்லோ"**

எனக் கூறி வருந்துவதாகப் பாடி நல்லிசைச் சான்றோர் நிரலை எய்திவிடுகின்றார்.

வளரும்...




80

**திருக்குறள் அறத்துப்பால்**

**– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை**

## 9. திருவள்ளுவரும் திருக்குறளும்

துறவின் சிறப்பு நோக்கியே, நீத்தார் பெருமையைப் பாயிரத்துட் கூறினாரென்று தோற்றுகின்றது.

சுவர்க்கத்தைப் பற்றிச் சொல்லும் இவர், நரகத்தைப் பற்றியும் சில இடங்களில் சொல்லுகின்றார். அதனை இருள் சேர்ந்த இன்னாவுலகம் என்றும், ஆரிருள் என்றும், அளறு என்றும் குறிக்கின்றார்.

### இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையைப் பற்றி இவர் கூறும் கருத்துகள் மிக அரியன. அவற்றின் திரண்ட பொருள் இல்வாழ்பவன் எல்லாவற்றையும் உபகாரம் செய்தே பயன்படுத்த வேண்டுமென்பதும், அவன் தன் உடலையும் பிறவற்றையும் பாதுகாத்தலும் அந்நோக்கத்துக்குத் துணையாக இருத்தல் வேண்டுமென்பதுமேயாம். இங்ஙனம் பிறர்க்குதவுதலே இல்லறத்துக்குச் சிறந்த கொள்கையென்பதை,

**இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

என்பதில் விளக்குகின்றார். தலைமை வகையினால் இல்லறத்தைத் தானம் (கொடை) என்று குறிப்பித்தலும் இதனை வற்புறுத்தும்.

### உழவு

பொருள் ஈட்டுவதற்குரிய தொழில்களுள் உழவும் வாணிகமும் தலைமையாவன. இவற்றில் உழவு மிகச்சிறந்தது. அதனைப்பற்றி இவர் கூறியது ஓர் அதிகாரமேனும் அதிலுள்ள கருத்துகள் ஒரு பெரிய நூற்கருத்துகளைப் போன்ற சிறப்புடையன. உழவைப் பற்றிய செய்திகள் பல குறளில் அமைந்துள்ளன. இடும்பையைப் பொருட்படுத்தாமல் முயற்சி புரிபவரை, 'மடுத்தவா யெல்லாம் பகடன்னான்' என்றும் கம்பீரமான நடையை, 'ஏறுபோல் பீடுநடை' என்றும் கூறுவனவற்றுள் உழவர்க்குரிய பகட்டின் செய்திகள் வருகின்றன. அரசன் குற்றம் செய்தார்களை ஒருத்தலுக்குப் பயிரிலுள்ள களையெடுத்தலை உவமை கூறுகின்றார். 'இளைதாக முண்மரங் கொல்க' என்று ஓரிடத்திற் சொல்கின்றார். 'வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று' என்றும், 'யாப்பினுள் அட்டிய நீர்' 'ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல், நீராக நீளுமிந் நோய்' என்றும் கூறுவனவற்றுள் நீர் பாய்ச்சும் தொழிலை உவமைப்படுத்துகின்றார். 'தொட்டனைத் தூறு மணற்கேணி', 'இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்', குளவளாக்கோடின்றி நீர்நிறைந் தற்று என்பவற்றில் நீர் நிலைகளைப் பற்றிய செய்திகள் வருகின்றன.

வளரும்...



# ஆழங்கண்ட ஆளுமையர்... 86

- ஔவை நடராசன்

## சிரிக்கப் பேசும் சீர்குறள் சாமி

திருக்குறளார் முனிசாமி திருவாசகமணியைப் போல, நான் குறிப்பிட்டு நினைத்து மகிழும் நல்லறிஞர், திருக்குறள் முனிசாமி. திருக்குறளார் சிவந்த நிறமுடையவர். எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்ந்தவர். அவரைப்போல், இன்னொரு நகைச்சுவையாளரைப் பார்க்கவே முடியாது. மேடையில் பேசும்போது, அவரது நகைச்சுவையைக் கேட்டுச் சிரிக்காமல், எவராலும் இருக்க முடியாது.

எவ்வளவு கடினமான திருக்குறளையும் எளிமையாகவும் உலக நடைமுறையோடும் எடுத்துச் சொல்வதில், அவருக்கு நிகர் யாருமில்லை. விழுப்புரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக, கோயங்காவுக்கு எதிராக நின்று வெற்றி பெற்றவர்.

தந்தை பெரியாரோடு, நன்றாகப் பழகியவர். அண்ணா, கலைஞர் என்று அவருக்கு எல்லோரையும் தெரியும். ஆனால், அவருக்கு அரசியல் கட்சிகள் மீது பிடிப்பேயில்லை. எந்தக் கட்சியிலும் வாய்ப்புக் கிடைத்தால் போய்ச் சேர்வது என்று அவரது நிலைப்பாடு தெளிவின்றி இருந்தது. திருக்குறளைப் பரப்புவதே, அவர் வாழ்வின் நோக்கமாக இருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலும், அவர் பெரிதாக எந்த அரசியல் உரைகளையும் நிகழ்த்தவில்லை. ஆனால் திருக்குறள் விளக்கங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் ஒருமுறை சென்னை வந்திருந்தபோது, என்னைப் பார்த்து, “எனக்கு வயதாகிறது. திருக்குறளைப் பற்றி 60 ஆண்டுகளாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். ஏன் எனக்கு ஒரு பதவி தரக்கூடாது? எனக்கு ஏதாவது மதிப்பூதியம் தரலாம் அல்லவா?” என்று என்னிடம் கேட்டார்.

எதிர்பாராதவிதமாக, அதே நாளில் இது பற்றி, நான் அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் பேசினேன். என்ன செய்யலாம்? என்று அவர் என்னிடம் கேட்டார். “நம் வள்ளுவர் கோட்டத்தில் ஓர் அலுவலகம் அமைத்து, திருக்குறள் நெறிபரப்பு இயக்ககம் என்று பெயரிட்டு, அதன் தலைவராகத் திருக்குறளாரை அமர்த்தலாம்” என்று சொன்னேன். உடனே எம்.ஜி.ஆரும் சரி என்று சொன்னார்.

வளரும்...

## நற்றிணை - 369

தோழிக்குத் தலைவி கூறுதல்

நெய்தல்

மதுரை ஓலைக் கடையத்தார்
நல்வெள்ளையார்

சுடர் சினம் தணிந்து குன்றம் சேர,
நிறை பறைக் குருகினம் விசும்பு உகந்து
ஒழுக,
எல்லை பைபயக் கழிப்பி, முல்லை
அரும்பு வாய் அவிழும் பெரும் புன் மாலை
இன்றும் வருவது ஆயின், நன்றும்
அறியேன் வாழி தோழி! அறியேன்,
ஞெமை ஓங்கு உயர் வரை இமையத்து உச்சி,
வாஅன் இழிதரும் வயங்கு வெள் அருவிக்
கங்கைஅம் பேர் யாற்றுக் கரை இறந்து
இழிதரும்
சிறை அடு கடும் புனல் அன்ன, என்
நிறை அடு காமம் நீந்துமாறே.

## Natrinai - 369

SHE...

neytal.

madurai OlaikkdaiyattAr
nalveLLaiyAr

Fiery Sun turns scarlet dye!
Westward he bobs in! Does he sink!!
Flight of storks feather the sky!
A phalanx quick on slush flink!

Jasmines calyces open!
Yester–eve aches me still!
Will I get hit hot again?
Cedar Himmeleh's spell;

Ganga breaks; stiff..I can't shut!
Love steps up! How save that spill!
How bear eros! Shoreland is wet!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*

# குழந்தைக் கவிஞர் பரம்பரை!

- முனைவர் தேவி நாச்சியப்பன்





தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, தமிழ்ப் புலவர் பட்டம் பெற்றுத் தமிழாசிரியராகத் திகழ்ந்தவர் துரை. தில்லான் அவர்கள். திண்டுக்கல்லைச் சேர்ந்த இவர், "நமது தமிழாசிரியர்" என்ற இதழை மிகச் சிறப்பாக நடத்தியவர். சமீபத்தில் தமிழக அரசின் "தமிழ்ச்செம்மல்" விருது பெற்றவர்.

நல்லூர் பள்ளியில் 1952ஆம் ஆண்டு ஆசிரியராகச் சேர்ந்த காலத்தில், தம் மாணவக் கண்மணிகள் பாடி மகிழ, இவரே சில பாடல்களை எழுதிக் கொடுத்தார். அவற்றை மாணவர்கள் பாடி மகிழ்ந்தனர்.

பெரியவர்களுக்காக "ஒரு நூல் தூது செல்கிறது", "பக்திப் பாடல்கள்" எனப் பல நூல்களை எழுதிய இவர், "குழந்தைப் பாடல்கள்" என்ற தலைப்பில் குழந்தைகளுக்காக ஒரு நூல் இயற்றினார். அதில் "கடல்" என்ற பாடலைக் காண்போம்:

"கடலின் பக்கம் செல்லப்பா
கப்பல் வரும் பாரப்பா
உடலில் இன்பம் தோன்றுமே
ஓசை இனிமை கேட்குமே

திங்கள் தோன்றும் காட்சிபார்!
தென்றல் ஆடும் ஆட்டம்பார்!
தங்க நீரில் ஞாயிறு
தனித்துக் குளிக்கும் அழகுபார்!

வெள்ளைக் காளை போல்முகில்
விரைந்து விரைந்து போகும்பார்!
துள்ளி வந்து நீரிலே
தோய்ந்து மிதக்கும் அழகைப்பார்!

நத்தை நீட்டும் 'ஏரியல்'
நண்டு தூக்கும் காவடி
வித்தை காட்டும் வெள்ளலை
வேடிக் கையைப் பாரப்பா!
ஓடித் தாவும் தவளைகள்
உயரம் தாவும் வாளைமீன்
கூடித் தாவும் போட்டியில்
கொள்ளை மீன்கள் பாரப்பா!

அலுங்கி டாமல் நடப்பதில்
ஆமைக் குத்தான் முதலிடம்
நலுங்கு வைத்து நடப்பதில்
நத்தைக் குத்தான் முதலிடம்."

–துரை. தில்லான்

இப்பாடலில் கடற்கரைக் காட்சிகளையும் தொடர்புடைய மீன், நத்தை, நண்டு போன்ற உயிரினங்களையும் மேகம், சூரியன், சந்திரன் ஆகியவற்றையும் குழந்தைகளுக்கு எளிமையாக அறிமுகம் செய்தது சிறப்பு.

*****

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

35

ஒரு நாட்டின் மொத்த மதிப்பைக் கணக்கிடுவது கடினமானது. நாடு என்பது மக்களையும் சேர்த்தே அவர்களை பணமாக மதிப்பிட முடியாது. நாட்டின் நிலப்பரப்பைக் கொண்டும், அதனுள் உள்ள வளங்களைக் கொண்டும் ஒருவாறு மதிப்பிடலாம். ஆனால் அது சரியாக இராது.

தமிழ்நாட்டில் *8109000* எக்குட்டேர் (= *20037775* ஏக்கர், ~ *20* மில்லியன் ஏக்கர்) பரப்பில் வேளாண்மை செய்யப்படுகின்றதாம். ஒரு ஏக்கர் ஒரு இலட்சம் உருபாய் (இது *30*இலட்சமாயின் *30* ஆல் பெருக்குக), எனில் *2x10^12* உருபாய். இது *2* இலட்சம் கோடி உருபாய். (ஒரு கோடி என்பது *10^7* உருபாய்).

பயிர்த்தொழில் செய்யும் பகுதி *36%* என்று ஒரு தரவு (*ICAR*) சொல்கின்றது. ஆக *64%* இயற்கையான பகுதியும் (ஏரி குளங்கள், காடுகள், மலைகள்), நகர்ப்புரங்களும் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள *16* நகரங்களின் பரப்பளவு *58188.74* சதுர கி.மீ (தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பே *1,30,058* கி.மீ.)

நகரத்தில் சராசரியாக ஒரு சதுர அடி *5000* உருபாய் என்றால் *58188.74* சதுர கி.மீ ( = *6.26e+11*) என்பது *3.13x10^15* உருபாய். (ஒரு கோடி என்பது *10^7* உருபாய்.), எனவே *3.13x10^8* கோடி உருபாய். *31* கோடியே கோடி உருபாய். (ஒரு சதுர அடி *10,000* உருபாய் என்றால் *62.6* கோடியே கோடி)

*****

# BRIEF LIFE SKETCHES OF THE EUROPEAN SCHOLARS

- Mahavidvan **Meenakshi Sundaram**

*The Madura Mission had under its control about 12 stations. They consisted of merely mud houses usually thatched. There were very few churches built with bricks, and there were neither schools nor charitable institutions worthy of name. The land was then ruled by the Rajas of Madura, Ramnad, Tanjore, Gingi and Vellore along with zamindars and poligars who were subject to them and who paid an annual tribute.*

*The political state of Tamilnad was one of chaos and unrest when Fr. Beschi landed in India. The numerous rulers and chieftains were perpetually plotting against each other. During the first six years of his missionary life in Tamilnad, Fr. Beschi is seen shifting frequently from place to place. His first stay was at Gurekkalpatti in Tirunelvelly. He later moved to Avur near Trichinopoly and then to the lowlands on the Coromandel coast north of Tanjore. The Maratta chieftain Shahji, had oppressed the Christians during his campaigns and rule between 1682 and 1711. Fr. Michael Bertoldi had been imprisoned and Fr. Joseph Carvalho had died in jail in 1707. Saraboji the next chieftain was no better. The Christian fathers had to find shelter outside Tanjore and retired to Yelakurichi and Kumampathi which shel- tered them. They had to do all their work at night to evade being discovered and caught. This troubled state of affairs hampered missionary work a great deal and often the missionaries had to flee for their lives.*

******



# வள்ளுவம்..!

- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

## 9. வள்ளுவ அரசு

**குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்**

என்பது ஆசான் உடன்பாடு. தன் தீய குடிகளை ஒறுப்பது அரசின் பொறுப்பு எனினும், அதனை ஆற்றல் எவ்வகையானும் எளிய இனிய செயல் அன்று. தீய குடிதான் எனத் தெளிவதும், தீமைக்கேற்ற தண்டனை விதித்தலும், அரசுக்குப் பெருந் தொல்லை வினைகளாகும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கோவலனைக் கள்வன் என மாறியுணர்ந்தான்; சிலம்புக் களவுக்கு உயிர் வாங்கினான்; அதனால் கோல் வடுப்பட்டான் என ஆட்சியிழுக்கை அறிகின்றோம். தலைவன் தற்காப்புக்குக் குடிகளையொறுப்பது வடு என்றும், நற்குடிக் காப்புக்குத் தீக்குடி கடிவது தொழில் என்றும் காட்டுவான். வள்ளுவர் யாத்த நடை நுட்பம் நினையத்தகும்.

தன்னாட்டுக் கொடுங் குடிகளை, அயல்நாட்டுப் பகைபோல அரசு கருதப்படாது. கருதி அளவிறந்து தண்டிப்பின் ஏனை நற்குடிகளும் கூட அஞ்சும். தீய குடித்திருத்தமே ஒறுப்பின் நோக்கமாதல் வேண்டும் என்பது வள்ளுவம். நல்லாசிரியன் வகுப்பிற் குறும்பு இழைக்கும் மாணாக்கர்மேல் கறுவு கொள்ளான்; காலம் பார்த்து உள்வேவான்; வகுப்பு இயலுமாறும் அவர்தம் குறும்பு திருந்துமாறும் முறைசெய்வான். அரசாட்சி வகுப்பாட்சியை ஒப்பது.

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து**

என்ற குடியொறுப்புக் குறளின்கண், சொற்றோறும் அன்பு ஓடுதல் காண்க. நீடு நினைந்து மிக்க விழிப்போடு யாத்த பா இது. தக்காங்கு, ஒத்தாங்கு என்ற கிளவிகள் வள்ளுவ அரசின் நேர்மை நாடிகள். குற்றஞ் செய்ய அஞ்சும் மனப்பதம் 'நாண்' எனப்படும். நாணுடைமை மக்களுயிர்க்குச் சிறப்புக் குணம்; வாழ்க்கைக்கு வேலி. நாணறுந்தவன் யார்க்கும் எத்தீமையும் விளைவிக்கப் பின்வாங்கான். யாரொருவர் நாணும் அறும்படி சொல்லுதலும் செய்தலும் பிறப்புப் பிழையாகும். குற்றம் புரிந்தவன் மறுபடியும் குற்றம் புகாதவாறு, நாணுணர்ச்சி பெருக்குவதே ஒறுப்பின் படிப்பினை என்ற கருத்தால், 'தலைச் சொல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது' என்று தண்டனை நோக்கமும் அளவும் காட்டினார். 'கடிது ஓச்சி மெல்ல எறிக' (562) என ஆட்சியும் அன்பும் ஒறுங்கு வேண்டினார்; அச்சுறுத்தி நாண் காத்தார்.

வளரும்...





# தமிழன்னை நான்மணிமாலை

- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
சங்க இலக்கிய ஆய்வறிஞர்

**"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல" – (குறள் 337)**

"நிலைத்து வாழ்வதை ஒருபோதும் அறியாதவர்கள் எண்ணுவதோ ஒரு கோடியல்ல பல கோடி" என்பது நிலையாமை அறியாரின் மீதான வள்ளுவரின் எள்ளல். வாழ்வெல்லாம் அமைதி நிறைந்திருக்க வேண்டுமெனில் தேவையானது எதுவெனில் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'. நிலையாத வாழ்வை உணராமல் ஆட்டமிடுபவர் கட்டும் கற்பனைக் கோட்டைகளோ பல கோடி. நிலையாமை உணர்ந்து அடக்கம் காப்பவரோ இறப்பினும் நிலைப்பர் புகழ்மாலைகள் சூடி.

தளிர்த்து வந்த இலை உதிர்வதுபோல் இவ்வுயிர் ஒரு நாள் உடலை விட்டுப் பிரியும். பலருக்கும் உயிர் பிரிவதற்குச் சில காலம் முன்னரே வாழ்வின் நிலையாமைத் தத்துவம் புரியும். ஒவ்வொரு நாள் கழியும்போதும் அகவையில் ஒரு நாள் அறுபடுகிறது என்பதே எண்ண எண்ண அச்சுறுத்தும். வாழ்நாள் பிழைகள் எல்லாம் இறுதிக் காலத்தில் படக்காட்சிகளாகத் தோன்றும்போது மேன்மேலும் நெஞ்சம் உறுத்தும்.

"அந்நாளில், அகந்தையால் ஆட்டமாய் ஆடி வாழ்ந்ததையெல்லாம் காட்சிப்படுத்தும் மனச்சான்று. அந்நாள் வரை காத்திராமல் இன்றே நிலையாமைத் தத்துவத்தை உணர்ந்து அறங்களை மண்ணில் ஊன்று" என்று இளமையில் உணர வைத்தாள் தமிழன்னை. அன்னைக்கு என் அன்பான பாமாலை!

## அகவல்

விளைந்தவை பலவும் வியப்பும் தந்தன
விளைவுகள் பலவும் வித்தகம் தந்தன
எனைத்தும் கற்றே இலங்கி நிற்க
அனைத்தும் தந்த அன்னையைத் தொழுதேன்
வினைகள் சிறக்கும் விந்தைகள் செய்தாள்
மனையில் சிறக்கும் மாண்புகள் தந்தாள்
செல்லும் வழியில் சேர்ந்தே வந்தாள்
வெல்லும் வழிகள் விரித்தே சொன்னாள்
வல்லமை பெற்றே வளமும் பெற்றிட
நல்லவை யாவும் நவிலவும் வைத்தனள்
ஆர்வம் கூட்டி ஆற்றலும் கூட்டிப்
பார்வைக் கூர்மையால் பலவும் கற்றே
உலைக்கும் நெஞ்சில் ஊக்கம் ஏற்றி
நிலைக்கும் வண்ணம் நிமிர்ந்தேன் தமிழால்
கூச்சம் தயக்கம் குழப்பம் நீக்கிப்
பேச்சில் ஒளிர்ந்து பெருமை அடைந்தேன்
வாக்கில் சிறந்த வலிமை பெற்றே
நோக்கில் பொலியும் நுட்பம் அறிந்தேன்
நேர்மை குன்றா நிலையால்
சீர்மை பெற்றேன் செந்தமி ழாலே

## வெண்பா - 158

செந்தமிழ் தந்த சிறப்பால் ஒளிர்ந்திடும்
சிந்தையால் வென்றேன் செழிப்புடன் - எந்தையும்
தாயும் நினைந்த தகைமை அடைவேனே
ஓயும் வரையில் உழைத்து

## கட்டளைக் கலித்துறை

உழைப்பால் பெரிதாய் உயர்ந்தோர் உளரே உலகினிலே
தழைத்தே வளர்ந்தார் தளரா முயற்சியைத் தாம்பெருக்கிக்
கொழித்தார் பொருளில் குறையே இலாது மொழியினிலும்
செழித்தார் அதுபோல் செழித்தேன் படைப்பில் சிறப்புடனே..

## எழுசீர் விருத்தம்

சிறப்பொடு யாவும் செல்வது நன்றே
செழிப்புறு நல்ல செயல்களிலே
பிறப்பொடு வந்த பேறுக ளெல்லாம்
பெரிதென ஓங்கும் பெயர்வழங்கி
இறப்பொடு பொன்னை எடுத்துச் செல்வோர்
எவருமே இல்லை இதையுணர்வீர்
அறப்பொழி லாக ஆனவ ரன்றோ
அரும்புகழ் தன்னை அடைந்தனரே

# அகலாது அணுகாது பழகுக



- புலவர் தி.வே.விஜயலட்சுமி

ஆட்சி அதிகாரம் திறமை, சொல்வாக்கும் மிகுந்தவரிடம் அளவாகப் பழக வேண்டும். இக்கருத்தை

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்" – (குறள்.691)

என்ற குறட்பா குறிப்பிடுகிறது. இக்குறட்பாவிற்குச் சில உரையாசிரியர்கள் கண்ட விளக்கங்கள்.

**பரிமேலழகர்**

மாறுபடுதலையுடைய அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் அவரை மிக நீங்குவதும், மிகச் செறிவதும் செய்யாது தீக்காய்வார் போல இடை நிலத்திலே நிற்க என்பார் எளிதில் சினமுறும் தன்மையராதலால் ‘இகல் வேந்தர்’ என்று விளங்குவார்.

**டாக்டர் மு.வ**

தலைவரைச் சார்ந்து வாழ்கின்றவர் அவரை மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர் போல் இருக்க வேண்டும்.

**திருக்குறள் உரைவேள் ஜி. வரதராசனார்**

அதிகாரம் உடைய மன்னரோடு பழகுபவர் மன்னரிடமிருந்து மிகவும் விலகாமலும் மிகவும் நெருங்காமலும் நெருப்பை மூட்டிக் குளிர்காய்வார் போலப் பழக வேண்டும்.

இவ்வதிகாரத்தில் வரும் பத்துக்குறட்பாக்களும் தெளிவாக ஆட்சி அதிகாரத்தில் உயர்பதவிகளில் இருப்பவரிடம் அணுகி பணிபுரிவோர். பழகுபவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறியிருந்தாலும், உளவியல் அடிப்படையில், எல்லாரும் தங்களுக்கு இடையில் ஏற்படும் உறவுகளை எப்படிப் போற்றிக் காத்துக் கொள்ள வேண்டும், என்பதையும் நன்கு அறிந்து, நடைமுறைப் படுத்தின், வாழ்வில் பல வெற்றிகள் அடையலாம்.

வள்ளுவர் முடியாட்சிக் காலத்தில், அரசனோடு அமைச்சர்களும் தூதுவர்களும் எப்படிப் பழக வேண்டும் என்பதைத் ‘தீக்காய்வார் போல்’ என்ற உவமையால் விளக்கிச் சென்றமை, இன்றைய ஆட்சி முறைக்கும் ஆணையிடும் அதிகார முறைமைக்கும் பொருந்துவதை எண்ணிப் பார்க்கலாம்.

*********


முனைவர் க.சுபாஷிணி

# "Penang Standard"

பினாங்கிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவரத் தொடங்கிய மாத பத்திரிகை "பினாங்கு விஜய கேதனன்" பற்றிக் கடந்த இதழில் அறிமுகப்படுத்தியிருந்தேன். அதன் ஜூலை மாத இதழ் புதிய ஆங்கிலத் தலைப்பையும் இணைத்தவாறு வெளிவரத் தொடங்கியிருக்கின்றது.

பினாங்கு விஜய கேதனன் மாதந்தோறும் பிரகடனம் செய்யப்படும் *This Tamil Journal Penang Standard* என்ற தலைப்புப் பெயருடன் வெளிவந்திருக்கின்றது.

இஸ்லாமிய தமிழ்ப் புரவலர்கள் சிலரும் இப்பத்திரிகைக்கு மாத சந்தா அனுப்பியிருக்கின்றனர். அவ்வகையில் அப்துல் காதிறு மரைக்காயர், ஹாசீம் நெயினா மரைக்காயர், ஆதாம்கான் சாயுபு, ஓசன் சாயுபு, முகவது அசன், முகம்மதலி மரைக்காயர், மீராலெவ்வை மற்றும் வீ.ற.முத்துசாமி செட்டியார் முதலானோர் அப்போதைய மலாயா ரிங்கிட் 1 சந்தா செலுத்தி ஆதரித்திருக்கின்றனர்.

பினாங்கில் இருந்த அச்சகத்தில் வெளியிடப்பட்ட இப்பத்திரிகைக்குச் சிங்கப்பூரில் தொடர்பாளராகச் செயல்பட்டவர் ஓ மஸ்தான் சாயபு என்பவர். இப்பத்திரிகையின் இந்தோனேசியா ஆச்சே, சமலங்கான் பகுதிகளுக்கு ப.தல்பாதர் என்பவர் தொடர்பாளராக இருந்திருக்கின்றார். ஆக இந்தோனேசியாவில் அச்சமயம் வசித்து வந்த தமிழர்கள் இவரிடம் தொடர்பு கொண்டு பெறலாம் என்ற செய்தியைக் காண்கிறோம்.

1888 ஜூலை மாத இதழ், புதிதாகப் பெயர் விரிவாக்கம் கண்ட விஜய கேதனன் பத்திரிகை அது தொடங்கப்பட்டு 3 மாதங்கள் தான் ஆவதாக இப்பத்திரிகையில் குறிப்பிடுகிறது. ஆகவே இதனை நோக்குகையில், பினாங்கு விஜய கேதனன் 1888 ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டிருக்கலாம் என்பதை ஊகிக்கலாம். ஆயினும் இதே பினாங்கு விஜய கேதனன் பத்திரிகை 1886ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதென்று அக்டோபர் 1898ஆம் ஆண்டு பினாங்கு விஜய கேதனன் பத்திரிகை தெரிவிப்பதைக் காணும் போது 1886ஆம் ஆண்டு தொடங்கி, பின்னர் ஆங்கிலப் பெயரையும் இணைத்துக் கொண்டு ஜூலை 1888இல் வெளிவந்திருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.

நான்கு பக்கங்களே கொண்ட இப்பத்திரிகையில் உள்நாட்டு வெளிநாட்டு செய்திகள் இடம்பெறுகின்றன. அதில் இடம்பெறுகின்ற சில இந்திய மற்றும்


பினங்கு விஜய கேதனன்.

The Penang Standard

திங்கட்கிழமைதோறும் பிரகடனஞ்செய்யப்படும்

படியிடைக்கல் வினையுந்தீர் வெற்றிக், கொடியுலட யாரெனக் கொள்ளுங்கள்.

VOL 3] பினாங்கு:—7உ நவம்பர் மீ 1898-ஞ [NO. 6.

அயல்நாட்டு செய்திகளைச் சுருக்கமாகக் காண்போம்.

1. பம்பாய் பல்கலைக்கழகத்தில் ஒரு பார்சியப் பெண்மணி பிஏ பட்டம் பெற்றுத் தேறினார்.

2. ஏறக்குறைய 70 வயதான இந்தியச் சக்கரவர்த்தினி (மகாராணி) ஹிந்தி மொழி படிக்கத் தொடங்கியிருக்கின்றார். தமிழ் மொழியும் படிக்கலாமே என்ற ஆதங்கத்தைப் பத்திரிகை பதிகிறது.

3. ஜெர்மனி நாட்டில் போசன் மாநிலத்தில் ஒருவர் 124 வயது வரை இருந்து இறந்திருக்கின்றார். அதே போல கொண்ஸ்டாண்டினிப்போல் (இன்றைய இஸ்தான்புல்) நகரில் 115 வயது வரை வாழ்ந்து ஒரு பெண்மணி இறந்திருக்கின்றார்.

4. ஒசூரில் 7 வயதுடைய பிராமணப் பெண் ஒருத்தி உடையில் நெருப்புப் பற்றி இறந்து போனதாகவும் இடுப்பில் ஒட்டியானம் அணிந்திருந்ததால் காப்பாற்ற முடியாமல் இறந்தாள்.

5. சிசுவிவாகம் - சென்னை பிளாக்டவுனில் வசித்து வரும் சாமர்த்தி விஜயராகவலு செட்டியாரின் 12 வயதுள்ள ஒரு தத்து புத்திரனுக்குச் செட்டியாரின் மைத்துனனின் 2 வயதுள்ள பெண் குழந்தை விவாகம் செய்யப்பட்டதாம். ஆனால் கடந்த மே மாதம் அக்குழந்தை இறந்து விட்டதாம். இப்படி இன்னும் பல செய்திகள் இந்த நான்கு பக்கங்களில் அடங்குகின்றன.

*[குறிப்பு: இப்பத்திரிகைச் செய்தி இக்கட்டுரை ஆசிரியரால் பிரித்தானிய நூலகத்தின் "இந்தியா அலுவலகம்" பகுதியில் உள்ள ஆவணப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து 11.03.2025 அன்று மின்னாக்கம் செய்யப்பட்டது]*

******




தமிழுக்குத் தொண்டாற்றிய ஐரோப்பியர்களில் குறிப்பிடத்தக்க இராபர்ட் கால்டுவெல் அவர்களின் பிறந்தநாளான மே - 7 அன்று மலர்ந்த 283-ஆவது உலகத்தமிழ் மின்னிதழில் அவரின் உருவச் சிலையின் ஒளிப்படம் முகப்போவியமாகப் பிரசுரமாகி இருப்பது வரவேற்கத் தக்கது.

தொடர்ந்து ஆசிரியம் பகுதியில் இராபர்ட் கால்டுவெல் பற்றிய குறிப்புகள் மிகச் சிறப்பாக இடம் பெற்றிருக்கின்றன.

இவர் சென்னையில் இருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடையன்குடி கிராமத்திற்குக் கால்நடையாகவே வருகை தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கால்நடையாகவே வந்ததற்கான ஒரு காரணமும் சொல்லப்பட்டு இருப்பதை நான் பார்க்கிறேன்.

அதாவது தமிழ் மண்ணைப் பற்றியும் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் மொழியைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நோக்கத்திற்காகவே இவ்வாறு கால்நடையாக இடையன்குடிக்கு இவர் வந்தார் என்பதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதுதான்.

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்கின்ற ஒரு தலையான நூலைத் தந்த பெருமான் இவர். 'திருநெல்வேலி சரித்திரம்' என்கின்ற நூலையும் தந்தவர் இவர். பொதுவாக திருநெல்வேலிக்குப் பணிக்காக வருகை தருகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இந்தத் திருநெல்வேலி சரித்திரம் என்கின்ற நூலைத்தான் படித்துத் தெரிந்து கொள்வார்கள். அந்த நூலைத்தான் விரும்பி வாங்கி வைத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட சிறப்புக்குரிய நூலை எழுதியவர் மட்டுமல்ல தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியவர்.

திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியில் அவர் வாழ்ந்த இல்லம் அரசு நினைவுச் சின்னமாக ஆக்கப்பட்டு, ஆண்டுதோறும் அவர் பிறந்த மே-7 அன்று தமிழ் வளர்ச்சித் துறையினரால் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

முன்னதாக வெளியாகி இருக்கும் கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுத் திட்டத்தைப் பற்றி வெளியிடப்பட்டிருக்கிறது.

அதில் சிறந்த நூலுக்கு 30000 ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகை இப்போது 50,000 என உயர்த்தப்பட்டிருப்பதை ஏன் குறிப்பிடவில்லை என எனக்குத் தெரியவில்லை.

நூலேணி, தமிழெழுச்சி பகுதிகள் வழக்கம் போல இடம்பெற்றிருக்கின்றன.

தேன் துளி பகுதியில் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் குழுவில் ஔவை நடராசன் அவர்களின் பெயர் இடம் பெற்றிருந்த செய்தி முதல் துளியில் வெளியாகி இருக்கிறது.

இரண்டாவது துளியில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசு வழங்கி வரும் ஓய்வூதியம் பற்றிய குறிப்பு வெளியாகி இருக்கிறது... பாராட்டுக்கு உரியது.

ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் இந்த வாரம் வெளியாகி இருக்கின்ற செய்தியில் கடைசி வரி நம்மை நெகழ்ச்சி அடையச் செய்கிறது.

"திருவாசக மணியைப்போல் இனி மறுவாசக மணியைப் பார்ப்பதேது" என்ற வரி படிப்போரை நெகிழ்ச்சிப்படுத்துகிறது.

வழக்கமாக முனைவர் தேவி நாச்சியப்பன் எழுதி வரும் குழந்தைக் கவிஞர் பரம்பரை

பகுதியில் இந்த வாரம் சி.ர. கோவிந்தராசன் என்ற இயற்பெயர் கொண்ட பூவை அமுதன் அவர்களைப் பற்றிக் குறிப்புத் தந்திருக்கிறார்.

இவர் சிறந்த குழந்தை இலக்கியப் படைப்பாளி என்பதையும் தாண்டி ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதிப் பெருமைக்கு உரியவர் இவர்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் விதமாக இவர் எழுதி பிரசுரமாகி இருக்கும் பாடல் சிறப்பான பாடலாக இருக்கிறது.

பேராசிரியர் செ. இரா. செல்வகுமார் அவர்கள் எழுதி வரும் கல்வி என்பது பெருங்கடல் என்கின்ற பகுதியில் இந்த வாரம் அவரது கடைசி வரியில் ஒரு முரண் இருப்பதாகப் பார்க்கிறேன்...

"தாழ்வு மனப்பான்மை விடாது ஊட்டிக்கொண்டே இருப்பவர்களின் கருத்துகளை அப்படியே நம்புவது வேண்டாம்" என்பதில் ஒரு முரண் இருப்பதாக எனக்குப் படுகிறது.

புலவர் தி.வே. விஜயலட்சுமியின் அகலாது அணுகாது பழகுக வாசிப்பதற்கு இனிமையாக இருக்கிறது.

அறிவோம்-06 பகுதியில் அருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளர்கள், இயக்குநர்கள், ஆணையர்கள் ஆகியோரின் விவரங்களை நாம் தெரிந்து கொள்ள ஏதுவாக விவரமாக வெளியாகி இருக்கிறது.

முனைவர் க.சண்முகம் எழுதி வரும் பொருள்களின் இணையப் பயன்பாடுகள் வழக்கம் போல பயனுள்ள பகுதிகளை இந்த வாரமும் வெளிப்படுத்தி இருக்கிறது.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே... என்கின்ற பகுதியில் வாரந்தோறும் கவிதைகள் வெளியாகி வருவதைப் போல இந்த வாரமும் தொடர்ந்து முனைவர் கடவூர் மணிமாறனின் கவிதை இடம் பெற்று இருப்பது சிறப்புதான்.

செய்தி வெளியீடு பகுதியில் அருமையான செய்தியும் ஒளி படங்களும் இந்த வாரம் வெளியாகி இருப்பது பாராட்டுக்கு உரியது.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளைச் சிறப்பிக்கும் விதமாக ஏப்ரல்' 29 முதல் மே'5 வரை ஒரு வார காலத்திற்குத் தமிழ் வார விழா நடத்தப்படும் என்கின்ற மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பினைத் தொடர்ந்து, நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி ஒளிப்படங்களோடு வெளியாகியிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலந்து கொண்டு ஐந்து சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கான நூலுரிமைத் தொகையினை வழங்கியும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுத் தொகையை வழங்கியும் சிறப்பித்த ஒளிப்படங்கள் அருமையாக வெளியாகி இருக்கின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் படத்திற்கு மாண்புமிகு முதல்வர் மரியாதை செலுத்துகின்ற படமும் வெளியாகி இருக்கிறது.

இந்தப் படம் கடந்த வாரமே வெளியாகி இருக்க வேண்டும்...

கடந்த வாரம் வெளியாகாததை நான் கடந்த வாரமே பூமழையில் சுட்டிக்காட்டி இருந்தேன்.

பாரதிதாசனுடைய படத்திற்கு மரியாதை செலுத்தப்படும் படம் இந்த வாரமாவது வெளியிட்டு இருப்பது பாராட்டுக்கு உரியது.

தொடர்ந்து இதழின் நிறைவு பகுதிகளான சட்டவியல் அகரமுதலி மற்றும் புகழ் வணக்கம் ஆகிய பகுதிகளோடு 37 பக்கங்களில் நிறைவாகி இருக்கிறது 07.05.2025 அன்று வெளியான 283-ஆவது உலகத்தமிழ் மின்னிதழ்.



கவிஞர் பேரா, திருநெல்வேலி.




*07.05.2025 உலகத்தமிழ் 283 மரங்கள் சூழ்ந்த இடத்தில் கம்பீரமான கால்டுவெல் சிலை முகப்பை அலங்கரிக்கிறது.*

*தமிழில் சிறந்த நூல்களை எழுதியோருக்கும் நூலை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் தேர்வு செய்து தமிழக அரசு பரிசு வழங்கி வருவது பாராட்டுக்குரியது. அதற்கென 2024 - 2025ஆம் ஆண்டிற்கு ரூ.13,80,000/- ஒதுக்கீடு செய்யப்பட்ட செய்தி கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளது.*

*உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள் அட்டைப்படத்துடன் இடம்பெறுவது அனைவருக்கும் பயனுடையது. அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'கிறித்துவமும் தமிழும்' நூலில் தமிழ் மொழி வளர்ச்சி பெரும்பாலும் ஐரோப்பியப் பாதிரியார்களால் உண்டானவையே எனக் குறிப்பிடும் செய்தியோடு, அயர்லாந்து நாட்டில் பிறந்த கால்டுவெல் இந்தியா வந்து 53 ஆண்டுகள் பல சிறந்த ஆய்வுகள் மேற்கொண்டு செம்மொழித் தமிழின் மேன்மையை உலகறியச் செய்தார் என நம் ஆசிரியர் பதிவு செய்கிறார்.*

*அறிஞர் கால்டுவெல் பிறந்தநாள் மே 7 அன்று தமிழக அரசின் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது என அறிந்து மகிழ்ச்சி.*

*மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள 'தமிழ் தமிழர் படைப்பும் ஆளுமையும்' பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு அவ்வப்போது பகுதியில் ஆசிரியர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.*

*தேன் துளி 1- 1991ஆம் ஆண்டு நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா வழிப்படுத்தும் குழுவில் ஔவை நடராசன் ஐயா இணைந்திருந்தார் என்ற செய்தி. தேன் துளி 2 - சுதந்திரப் போராளிகள், மருது சகோதரர்கள் சந்ததியினர், வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினர், இராமநாதபுர மன்னர் சந்ததியினர் எனப் பலருக்கு மாதந்தோறும் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் செய்தி.*

*உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள் சேரமன்னர் வரலாறு முடிப்புரை இடம் பெற்றுள்ளது.*

*வேத வழக்கோடு இயைந்த பல செய்திகள் நான்கு ஆச்சிரமம், ஐவகைக்*

கடன்கள், அந்தணர் ஒழுக்கம் பற்றிய தகவல்கள் திருக்குறளில் பல வகையில் இணைக்கப்பட்டுள்ளன என்கிறார் நாகை சொ.தண்டபாணிப்பிள்ளை.

ஆழங்கண்ட ஆளுமையர் தொடரில் திருவாசகமணியைப் போல் இனி மறுவாசக மணியைப் பார்ப்பதேது? என ஐயா ஔவை நடராசனார் கூறியுள்ளார்.

"கல்வி என்பது பெருங்கடல்" கட்டுரை ஆசிரியர் தமிழ்நாட்டில் கல்வி நிலை பற்றிக் கூறுகிறாரா? அல்லது இங்கிலாந்து மக்களின் புறத்தூய்மை பற்றிக் கூறுகிறாரா?.

'ஓர்ந்து கண்ணோடாது' எனத் தொடங்கும் குறட்பா வழி மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் ஓரரசு குடிகளின் துணையை எஞ்ஞான்றும் போற்றிக் கொள்கை வேண்டும் என்கிறார்.

புலவர் திருமதி தி.வே.விஜயலட்சுமி அவர்கள், 'அகலாது அணுகாது தீக்காய்வர்' எனும் குறள், ஆட்சி அதிகாரம், செல்வாக்கு மிகுந்தவரிடம் அளவாகப் பழக வேண்டும் எனச் சுட்டிக்காட்டுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

முனைவர் திருமதி க.சுபாஷிணி அவர்கள் மலாயா ஆவணங்கள் 7இல் விஜய கேதனன் என்ற மாதப் பத்திரிகை பற்றித் தெளிவான தகவல்கள் தருகிறார்.

கல்வி நிறுவனங்களில் மாணவர் வருகை, நடத்தை, செயல்பாடுகள் மற்றும் பேராசிரியர்களின் செயல்பாடுகள் அனைத்தையும் எளிதாகக் கண்காணிக்க பொருள்களின் இணையம் உதவும் என்கிறார் முனைவர் திரு க.சண்முகம் அவர்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் - தமிழ் வார விழா நிறைவில் தமிழக முதல்வர் அவர்கள் 5 சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியது மிகவும் பொருத்தமானது; மகிழ்ச்சியானது. முதல்வருக்கு நன்றி.

வாழுங்காலத்திலேயே இப்பெருமை பெற்ற குறிஞ்சிச் செல்வர் திரு கொ.மா.கோதண்டம் ஐயா உள்ளிட்ட அனைவருக்கும் என் வணக்கங்கள். ஔவை நடராசனார் மறைவுக்குப் பலர் அனுப்பிய செய்திகள் புகழ் வணக்கமாக 37ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது மகிழ்ச்சி.



முனைவர் தேவி நாச்சியப்பன்

# மொழிபெயர்ப்புத் துறையின் இயக்குநர்கள்

| வ.எண் | பெயர் | பணியாற்றிய | ஆண்டு |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் கு. இராசவேலு | 1968 | 1975 |
| 2. | முனைவர் ஔவை நடராசன் | 1975 சூலை | 1984 ஏப்ரல் |
| 3. | துணைச் செயலாளர்கள் (அலுவலால்) | 1984 | 1990 |
| 4. | திரு. பொன். சதாசிவம் | 1989 அக்டோபர் | 1995 திசம்பர் |
| 5. | முனைவர் ம. இராசேந்திரன் | 1996 சனவரி | 1999 மே |
| 6. | திரு. ஆ. இராமலிங்கம் | 1999 மே | 2002 சூன் |
| 7. | திரு. த. முத்துராசு | 2002 சூன் | 2006 மே |
| 8. | திரு. பி.எசு. சண்முகம் | 2006 ஆகத்து | 2006 செப்டம்பர் |
| 9. | திரு. த. வைரவசுந்தரம் | 2006 திசம்பர் | 2009 மே |
| 10. | முனைவர் ந. அருள் | 2009 நவம்பர் முதல் | - |

# பொருள்களின் இணையப் பயன்பாடுகள்



47

- முனைவர் க.சண்முகம், சென்னை

## IOT Applications in common utilities : பொதுவான பயனுடைமைகளில் பொருள்களின் இணையப் பயன்பாடுகள்:




நம்முடைய அன்றாட வாழ்க்கையில், நமக்குப் பயன்படும் பொதுவான பயனுடைமைகள் என்று கூறும்போது, அதில்

1) குடிநீர், மின்சாரம்

2) சாக்கடை மற்றும் கழிவு அகற்றுதல்

3) சுற்றுப்புறச் சூழல் மேலாண்மை (காற்றுத் தூய்மை) ஆகியவை அடங்கும்.

நீரின்றி அமையாது உலகு, என்பது போல் குடிநீர் என்பது மிக முக்கியமான ஒன்று. முன்னொரு காலத்தில் எங்குப் பார்த்தாலும் நீர் நிலைகளாகத் தென்படும். நாம் சிறுவயதில் இருந்தபோது கிராமங்களில் நடந்து செல்லும்போது தென்படும் அனைத்து அடிபம்புகள் மற்றும் தண்ணீர் பம்புகளில் தண்ணீர் வரும். ஆனால் இப்போது உள்ள நிலைமை, விவேக் காமெடியில் வருவதுபோல, தண்ணீர் பம்புகளில் காற்றுதான் வருகிறது. நீங்களே யோசித்துப் பாருங்கள்! நாம் தண்ணீரை மட்டும்தான் இலவசமாக பயன்படுத்தி வந்தோம். இன்று காசு கொடுத்தாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. காசு கொடுத்துத் தண்ணீர் வாங்கும் அவல நிலைக்கு யார் காரணம்? என நாம் சிந்திக்க வேண்டும். எந்த ஒரு பொருளும் இருக்கும்போது அதன் அருமை தெரியாது. இல்லாத போதுதான் அதன் வலி தெரியும். எங்கும் நீர்நிலைகள் காணப்பட்டபோது அதனை பாதுகாக்க மறந்து விட்டோம். இன்று எப்போது லாரியில் தண்ணீர் வரும் எனக் கண்விழித்து காத்துக் கொண்டிருக்கிறோம். சாலைகளில் உள்ள தண்ணீர் பம்புகளில் குடத்தை வைத்து இடம்போட்டு, வேகாத வெயிலில் வெந்து சாகிறோம்.

மற்ற உயிரினங்களை விட, மனிதர்கள் அதிகமாகக் குடிநீரைப் பயன்படுத்துகிறார்கள். குடிப்பது, சமைப்பது என்று நிற்காமல், பயிர் வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு, பொருள்கள் தயாரிப்பு தோட்டப் பராமரிப்பு என்று பல வேலைகளுக்கும் குடிநீரைப் பயன்படுத்துகிறோம். இந்தக் கடந்த நூற்றாண்டில் மட்டும், மனிதர்களின் குடிநீர் உபயோகம் 6 மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால், உலகின் குடிநீர் வளம் ஒன்றும் அதிகரிக்கவில்லை. கங்கை நீரைத் தூய்மையாக்கும் பணிக்கு என என்ன வகையான தொழில்நுட்பங்களைக் கையாளலாம் என அரசு பலவகையான தொழில்நுட்பப் போட்டிகளை நடத்தி வருகிறது.

புவி வெப்பமயமாதல் அதிகரித்து வருவதால் அதிகப்படியான வறட்சி நிலவுகிறது. இதனால் குடிநீர் வளம் ஒரு அரிய வளமாக்கி வருகிறது. அத்துடன் ஒரு

புயலோ, அல்லது பெரு மழையோ பெய்தால், நதி நீர் அல்லது ஏரி நீரின் தூய்மை குறைந்து விடுகிறது.


ஏரிகளில் தண்ணீரின் அளவு எத்தனை என்று பல அரசாங்கங்கள் பல ஆண்டுகளாகப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள். இவற்றைப் பதிவு செய்ய பொருள்களின் இணையக் கருவிகள் எளிதில் உதவும். அவ்வப்பொழுது நீரின் தூய்மை அளவு குறைந்து விடுவதால் அனைத்து நகரங்களிலும் சில நாள்கள் ஏராளமான குளோரின் வாசம் குடிநீரில் நாம் முகர்ந்திருக்கிறோம். நீரின் தூய்மை அளவைப் பொருள்களின் இணைய உணரிகள் மூலம் கண்காணிக்க முடியும். இந்தக் கருவிகள் மூலம் நீரில் உள்ள இரசாயன அளவு மற்றும் ஆக்ஸிஜன் அளவு என அனைத்தையும் கணித்துக் கூற முடியும். உணரிகள் மற்றும் கணினி மூலம் உடனே அறிவிக்க முடியும். உடனே அதற்குத் தேவையான நடவடிக்கையை நம்மால் எடுக்க முடியும்.

அதேபோல், காற்றுத் தூய்மை செய்வதும் இதன் மூலம் சாத்தியம். காற்று மாசுபடும் அளவைப் பொருள்களின் இணைய உணரிகள் மூலம் கண்டுபிடிக்க இயலும். டெல்லி போன்ற பெரிய நகரங்களில் காற்று மாசுவால் ஆக்ஸிஜனை மனிதர்கள் பயன்படுத்தும் அவலம் நிலவி வருகிறது. இந்தக் காற்று மாசுபடுவதற்கு முக்கியக் காரணம் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகையே ஆகும். நிறைய ஆர்வலர்கள், பொருள்களின் இணைய உணரிகளைப் பயன்படுத்தி, காற்றின் மாசுபடும் அளவைக் கண்டறிந்து வருகின்றனர். ஆனால், பெரிய நகரங்களில் யாரும் இதைக் கண்டுகொள்வதில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று.

அதேபோல் மின்சாரம் என்பது அடிப்படையான தேவைகளில் ஒன்று. பெரு மழை, புயலால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து விடுகின்றன. எங்குக் கம்பிகள் துண்டிக்கப்பட்டு விழுந்து கிடக்கின்றன எனக் கண்டுபிடிக்க இயலவில்லை. அந்நியன் படத்தில் வருவது போல, மழைநீரில் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து கிடக்கும். ஊழியர்களின் அலட்சியத்தால், கதாநாயகனின் தங்கை மின்சாரம் தாக்கி இறந்து விடுவதுபோல் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும்.

இதுபோன்ற இழப்புகளைப் பொருள்களின் இணைய உணரிகள் மூலம் முடிந்த அளவு சரி செய்ய முடியும். மின்சாரக் கம்பிகள், மற்றும் உப பகிர்மான நிலையங்கள் பெரும்பாலும் மிகவும் கடுமையான பகுதிகள், மலைகள், காடுகளைத் தாண்டி வருகின்றன. இத்தகைய கடுமையான பகுதிகளில் தொலைத்தொடர்பு வசதிகள் இருப்பதில்லை. மழை, புயல் என்று இயற்கையின் சீற்றத்தால் எளிதில் இரையாகும் வாய்ப்பு அதிகம் உள்ளது. பொருள்களின் இணையக் கருவிகள் மூலம், தொலைதூர மின் பகிர்மான அமைப்புகளில், வெப்பம், சீரான மின்சாரம் போன்றவற்றை அளந்து, இணைய உணரிகளின் மையப்பகுதிக்குச் செய்திகளை அனுப்பியவண்ணம் இருந்தால், எளிதில் மின்மாற்றிகளைப் பராமரிக்க முடியும். மேலும், பல இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் மின்சாரப் பேரிழப்புகளையும் சமாளிக்க முடியும்.

**********





எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே!

# செம்மொழியாம் செந்தமிழின் சீர்மை!!



88




முனைவர் கடவூர் மணிமாறன்


வேற்றுமொழிச் சொற்களினைக் கடன்வாங் காமல்
        வீறார்ந்த தனித்தன்மை விளங்கப் பெற்றும்
ஊற்றெனவே கலைச்சொற்கள் உருவாக் கத்தால்
        ஊடகத்தில் வலைத்தளத்தில் முதன்மை பெற்றே
ஏற்றமுடன் இணையத்தளம் எங்கும் காண
        எண்ணற்ற குறுந்தகட்டில் ஆட்சி செய்யும்
மாற்றத்தால் புதுமைபல விளைத்து வாழும்
        மாத்தமிழோ மலராக மணத்தல் பாரீர்!

திருக்குறளை,சிலம்பைத்தொல் காப்பியத்தைத்
        தேவாரம் திருவாசக அருட்பா தன்னை,
குறுந்தொகையோ டெண்தொகையை, பத்துப் பாட்டை,
        குறவஞ்சி மேகலையை நளவெண் பாவைப்
பெருங்கதைசிந் தாமணியை, கீழ்க்க ணக்கைப்,
        பிள்ளைத்தமிழ் கோவைஉலா பரணி தூது
அருளாளர் ஆழ்வார்தம் பாசு ரத்தை
        அணிசெய்யும் மணித்தமிழைப் போற்றி வாழ்வோம்!

...முற்றும்

# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண் : 1021** **நாள் : 12.05.2025**

**செய்தி வெளியீடு**

தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய்! இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாகும்!! என்னும் பாவேந்தரின் கவிதை முழக்கத்தைத் தமிழ்நாடு அரசு தலைமேற்கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன்முயற்சியின் விளைவுதான் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகச் செயற்படுத்தப்படும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் பெருந்திட்டமாகும். அறிவு வளர்ச்சியில் அக்கறை இல்லாச் சமூகம் உயர இயலாது என்பதை உணர்ந்தே தமிழ்ச் சமூகம் காலந்தோறும் செயலாற்றி வருகின்றது. வரலாறு அறியப்படாத காலம்தொட்டே இலக்கிய இலக்கணப் படைப்புக்களைத் தருவதில் தமிழ்வாணர்கள் ஏற்றமுடனே இருந்து வருகின்றனர் என்பது கண்கூடு. அந்நிலை இன்றும் தொடர்வதன் அறிகுறியே, இன்றும் தமிழில் எண்ணற்ற நூல்கள் வெளிவருவதே. காலந்தோறும் இந்நன்னிலை தொடருவதற்கே இப்பெருந்திட்டம் ஆக்கம் பெற்றுள்ளது.

அருவி நீர்த்துளிகளைப் போல ஆர்த்தெழும் நூல்களில், கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன் தரத்தக்கனவாக – திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக அமைவன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமையாமையை உணர்ந்து, கதை புனைவோரை – காவியம் படைப்போரை – கட்டுரையாளர்களை – ஆய்வு முனைவோரை ஊக்குவிக்க, அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவினரால்; அரசால் வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப; வரப்பெறும் நூல்களை ஆய்வு செய்து அறிஞர்களின் மதிப்பீடுகளைப் பெற்று, தமிழுக்குத் தகத்தகாய நூல்களைப் படைத்தளித்த நூலாசிரியர்களுக்கும், அந்நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிப் பெருமை கொள்கின்றது.

அவ்வகையில், 2024 ஆம் ஆண்டில் (01.01.2024 முதல் 31.12.2024 வரை) தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள 33 வகைப்பாடுகளின் கீழ், பரிசுப்போட்டிக்கு வரவேற்கப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூலாக ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்குப் பரிசுத்தொகையாக ரூ.50,000/– அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுத்தொகையாக ரூ.25,000/– என ஒரு நூலுக்கு ரூ. 75,000/– வரை பரிசுத்தொகைகள் வழங்கப்பெறும்.

நூல் வகைப்பாடு:

1. மரபுக்கவிதை
2. புதுக்கவிதை
3. புதினம்
4. சிறுகதை
5. நாடகம் (உரைநடை, கவிதை)
6. சிறுவ ர் இலக்கியம்
7. திறனாய்வு
8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்
9. பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்
10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)
11. அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்
12. பயண இலக்கியம்
13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு
14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு
15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்
16. பொறியியல், தொழில் நுட்பவியல்
17. மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்
18. சட்டவியல், அரசியல்
19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்
20. மருந்தியல், உடலியல், நலவியல்
21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்)
22. சமயம், ஆன்மிகம், அளவையியல்
23. கல்வியியல், உளவியல்
24. வேளாண்மையியல், கால்நடையியல்
25. சுற்றுப்புறவியல்
26. கணினியியல்
27. நாட்டுப்புறவியல்
28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம்
29. இதழியல், தகவல் தொடர்பு
30. பிற சிறப்பு வெளியீடுகள்
31. விளையாட்டு
32. மகளிர் இலக்கியம்
33. தமிழர் வாழ்வியல்

பரிசுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின் வலைதளத்திலோ (www.tamilvalarchithurai.org/siranthanool) இலவசமாகப் பதிவிறக்கம் (Download) செய்து பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் 10 ரூபாய் அஞ்சல் வில்லை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் 5 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100/- "தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை" என்ற பெயரில் வங்கிக் கேட்புக் காசோலை (Demand Draft) சேர்த்து அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள்: 16.06.2025

அனுப்ப வேண்டிய முகவரி


தமிழ் வளர்ச்சி இயக்குநர்,<br>
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,<br>
தமிழ்ச்சாலை, எழும்பூர்,<br>
சென்னை 600 008.<br>
தொலைபேசி எண்கள். 044 – 28190412, 28190413


**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu


# செம்மொழி நாள் போட்டிகள்: மாணவர்களுக்கு பரிசு



செம்மொழி நாளையொட்டி தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த பள்ளி மாணவர்களுடன் துறையின் இயக்குநர் ஔவை ந.அருள்.

சென்னை, மே 10: தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் செம்மொழி நாளையொட்டி, சென்னை மாவட்டத்தில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் தேதியை செம்மொழி நாளாகக் கொண்டாடுவதை முன்னிட்டு, அனைத்து மாவட்டங்களிலும் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

அந்த வகையில், சென்னை மாவட்டத்துக்கான இலக்கியப் போட்டிகள் சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் சென்னையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

கட்டுரைப் போட்டியில் சென்னை அசோக் நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி ம.ஜெ.அர்ஷயா - முதலிடம், ஸ்ரீராம் தயாள் கேம்கா விவேகானந்தா வித்யாலயா பள்ளி மாணவர் மு.க.தர்ஷன் - இரண்டாமிடம், விருகம்பாக்கம் ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி சௌ.சிஹா பானு மூன்றாமிடம் பெற்றனர்.

அதேபோன்று பேச்சுப் போட்டியில் திருவல்லிக்கேணி என்.கே.டி. தேசிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி சே.தனுஸ்ரீ - முதலிடம், தண்டையார்பேட்டை முருகதனுஷ்கோடி மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி வே.ரெ.நைட்டிங்கேல் நிஷா - இரண்டாமிடம், வேளச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி மு.ஆர்த்தி மூன்றாமிடம் பெற்றனர்.

இரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ. 10 ஆயிரம், ரூ. 7 ஆயிரம், ரூ. 5 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. பரிசுத் தொகையுடன் சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை ந.அருள் வழங்கினார்.

38 மாவட்டங்களிலும் முதல் பரிசு பெற்ற மாணவர்கள் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் மே 17-ஆம் தேதி மாநில அளவில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளனர்.

# சட்டவியல் அகரமுதலி!

**English - Tamil Legal Glossary**

**Dr.Marco A.Fiola**
**Department of Languages , Literatures and Cultures, Ryerson Law Research Centre, Ryerson University**

*841) To live together in a spousal relationship, whether within or outside of marriage*

- *cohabit* - இணைந்து வாழ்பவர்

*842) Liability shared amongst parties*

*joint liability* - இணைப் பொறுப்பு

*843) The principles of procedural fairness developed by the common law and re-enforced frequently by statute. They consisted historically of two limbs: the right to be heard and the right to an unbiased decision maker*

*natural justice* - இயற்கை நீதி

*844) Latin term for "new." A hearing after a decision, as if no decision had previously been made - de novo hearing*

இரண்டாம் முறையாக, மறுபடியும்

*845) Term applied to a criminal offence which may be tried by summary conviction procedure or by indictment at the option of the prosecutor. A hybrid offence is an indictable offence until the Crown elects to proceed by way of summary conviction. The difference is in the process followed*

*hybrid offence* - இருவழிக் குற்றம்



*846) An imprint affixed to a document to prove authenticity and attest to its accuracy*

*seal* - இலச்சினை

*847) Closed to the public. If the court seals a court file or a court document filed, public access is only permitted by order of the court*

*sealed* - இலச்சினையிடப்பட்ட.

*848) Damages awarded to punish a defendant for their purposely harsh, vindictive or malicious behavior*

*punitive damages* - இழப்பீட்டுத் தண்டனை

*849) Damages awarded for actual loss, in order to place the plaintiff in a position that he or she would have been in had he or she not suffered the wrong complained of*

*compensatory damages* - இழப்பு ஈடு செய்தல்

*850) Federal statute that sets out the procedures for criminal charges and sentences against persons under 18*

*Youth Criminal Justice Act (YCJA)* - இளங்குற்றவாளிகளுக்கான நீதி அதிகாரச் சட்டம்

*****



# புகழ் வணக்கம்

| | |
|---|---|
| 779 | Deepest condolences.<br>Ghee sendil |
| 780 | Great loss for our Tamil world. I prey for his soul may rest in.peace.An–nan pugal onguha akilam ullavarai<br>kavingar Ravi bharathi. |
| 781 | ஐயா அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.<br>Computer vijay |
| 782 | ஆழ்ந்த இரங்கல்.<br>Neechalkaran rajaram |
| 783 | ஆழ்ந்த வேதனை அடைகிறேன் அருள். என் வழிகாட்டிகளில் ஒருவர். என்னை மகன் என்று சொல்லிய ஐயன். வெளியூரில் இருக்கிறேன் அருள். துன்பத்தில் பங்குகொள்கிறேன்.<br>கு.அரசேந்திரன் |
| 784 | We missed the great human being in our life. My deep condolence to you and your family.<br>Roy suresh |
| 785 | ஆழ்ந்த இரங்கல் ஐயா தாங்கள் இனிமேல் தான் மன உறுதியோடு இருக்க வேண்டும். உங்களின் தந்தை எப்போதும் உங்கள் உடன் இருப்பார்...<br>Dr vijayaragavan |
| 786 | ஆழ்ந்த வருத்தங்கள்... பேராசிரியர் செய்த பணியை முன்னெடுப்போம்... அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி... உண்மையில் மனம் வருந்துகிறேன்... காலை வருவேன்...<br>Dr satish |
| 787 | அருள் சார், தந்தையாரின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அண்மையில் அவரை நேரில் சந்தித்து ஆசி பெற்றபோது அவர் அன்புடன் பேசியது என் நினைவில் நீங்காது நிற்கிறது. அவரது பிரிவால் வாடும் உங்கள் பெருந்துயரை நானும் பகிர்ந்து கொள்கிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் அவர் தகைமையை என்றும் போற்றும்.<br>Durai danapalan |
| 788 | Very sorry to hear the news about your father, our prayers to give you and your family enough strength to bear the loss. Om shanti.<br>Auditor sukumar |